உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இஃது

ஸ்ரீ காஞ்சி சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டத்[illegible]ரும்

சைவப்பிரசாரகருமாகிய

வித்வான் பா. மு. முருகேச முதலியார் அவர்கள் இயற்றிய

# இராமலிங்கபிள்ளைபாடல் ஆபாசதர்ப்பணம்

அல்லது

# மருட்பாமறுப்பு விஜயகோலாகலம்,

ஸ்ரீபரமாசாரியசுவாமிகள் கட்டளைப்படி,

அருட்பா வெற்றிக் கையுறையாய்த்

திருமுறைமகோற்சவ மகாவிபவமும்

ஸ்ரீ காஞ்சி சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டத்தின் காரியதரிசியாகிய

டி. செ. முருகேச முதலியார் அவர்கள் இயற்றிய

காஞ்சித் திருமுறை மகோற்சவ நாமாவளியும்

அடங்கியிருக்கின்றன.

U.V. SWAMINATHA IYER LIBRARY
DR. U.V. SWAMINATHAIYER MADRAS-41

இஃது

ஸ்ரீகாஞ்சீபுரத்திலே மகாவிபவமாக நிகழ்ந்த

பன்னிருதிருமுறைத்

# திருவருட்பா விஜய சிந்தனாவோசனை

மகோற்சவ தினத்தில்

சேயூர்

ஸ்ரீசித்தாந்த சிவநேசத் திருக்கூட்டத்தாரால்

ஸ்ரீகாஞ்சீபுரம் [illegible]ணை அச்சியந்திரசாலையில், பதிப்பித்து விநியோகித்தது.

குரோதி ஹூ தைமீ 10உ (22-1-1905)

முதற்பதிப்பு பிரதிகள் 500

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஞானசம்பந்தகுருப்யோநம:

# இராமலிங்கபிள்ளைபாடல் ஆபாசதர்ப்பணம்

## அல்லது

## மருட்பா மறுப்பு விஜய மகாசரபம்.

கருங்குழி என்றபெயரைச் சிதம்பரமென்று மாற்றப்பாட்டுச் செய்தும், உருத்திரர், விஷ்ணு, பிரமன் முதலாயினோரை மலப்புழுக்களென்று நிந்தித்தும், தகராகாசமாகிய சிதம்பரத்தைத் தூஷித்தும், வடலூர்ச்சுகொட்டையே உத்தரஞானசிதம்பரமென்றுகூறியும், தமக்குத் திருவருட்பிரகாசவள்ளலென்று சிவபெருமானுக்குரிய நாமத்தை வைத்தும், தம்பாடல்களுக்குத் தேவாராதி திருமுறைகளுக்குரிய திருவருட்பா என்னும்பெயரை வைத்தும், வேதசிவாகமங்களைப் பயனிலவென்று பழித்தும், செத்தவர்களை யெழுப்புவேனென்று கூக்குரலிட்டும் செத்துப்போன, கருங்குழி இராமலிங்கபிள்ளையினிடத்தில் அபிமானமுள்ள போலிச்சைவர்கள் சிலர் அவரைக்கடவுளென்றும், அவர் பாடல்களை அருட்பாவென்றும் சென்னையில் ஆர்வாதம்பண்ணினார்கள். அத்துவித சித்தாந்த மஹோத்தாரரும், ஆரணிநகர சமஸ்தானவித்துவானும், மாயாவாததும்சகோளரி என்று சென்னை அரசாங்கத்தாராலும் உறுதிப்படுத்தப்பெற்றவரும், மதுரைத்தமிழ்ச்சங்கப் புலவரும்ஆகிய யாழ்ப்பாணத்து மகாவித்வான் ஸ்ரீமத் ந. கதிரைவேற்பிள்ளை அவர்களை விவாதிக்கவருமாறு அறைகூவினார். அவர் சென்னை, காஞ்சி, சிதம்பரம், தேவகோட்டை, திருமுருகன்பூண்டி முதலிய பலப்பல இடங்களிலுள்ள சபைகடோறும் இராமலிங்கபிள்ளை அருள்பெற்றவரல்லரென்றும், அவருக்குத் திருவருட்பிரகாசவள்ளலார் என்றல் தகாதென்றும், அவரது மயக்கமும் அஞ்ஞானங்களும் பொய்களும் நிறைந்த வெறும்பாடல்களுக்கு அ

திருவருட்பா திருமுறை என்னும்பெயர்கள் ஒருசிறிதும் பொரு
ந்தாதென்றும் பற்பல நியாயங்களைக்காட்டி விவாதித்து, சைவத்
திருக்கூட்டத்தினர் யாவர்க்கும் ஆனந்தமுண்டாகுமாறு முன்
னோர் கொள்கையை நிலைநாட்டினார். அச்சமயத்தோடும் எதிர்
நின்றுவாதிக்க அஞ்சியொளித்த போலிச்சைவர்களெல்லாம் கூப
கூர்மம் போலப் புரளிகளையும் நிந்தைகளையுங்கட்டித் தாம்கெடு
வதோடு தம்மையடுத்தாரையும் கெடுக்குமாறு சைவசித்தாந்தத்
திற்கு மிக்க விரோதமான மருட்பாவைப் படிக்கத் தூண்டித்
தேவாரமுதலிய திருமுறைகள் அருட்பா ஆகாதென்றும் கருங்
குழியார்பாடல்களே அருட்பா ஆகுமென்றும் அஞ்சாஞ்சமயகுர
வர் தங்கணக்கர் என்றும் தம்பிடாப்பிடியைச் சாதித்தற்கும்
பாராவாத தம்சமோசாரி அவர்கள்மீதுவைத்த பொறாமையை
காட்டற்குமாகப் பலவாறுகூறுவாராயினார். எங்கேபார்த்தாலும்
அருட்பா மருட்பா என்றசொற்களே தொனியாகின்றன.

ஸ்ரீமாந் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் பற்பல உபந்நியாச
ங்களாற் கருங்குழியார்பாடல்களைக்கண்டித்துவென்றார். அன்ன
வரின் உபந்நியாசசாரங்கள் வெளிவருமாயின் மருட்பாவினை அரு
ட்பாவென்றும், மருட்பிரகாச இராமலிங்கபிள்ளையை அருட்பிரகாச
வள்ளலாரென்றும் மருண்டபோலிச்சைவர்கள் தெருண்டுண்மை
கண்டு உய்வரென்னும் உபகாரசிந்தை கொண்டே "இராமலிங்க
பிள்ளைபாடல் ஆபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறு
ப்பு" என்னும் புத்தகத்தைச் சென்னை வேதாகமோக்த சைவ
சித்தாந்த சபையார் பதிப்பித்து வெளிப்படுத்தினர். அப்புத்த
கத்தைக்கண்ட பற்பல வித்துவசிகாமணிகளும், உண்மைச்சைவ
ர்களும், பரமாசாரியர்களின் பெருமை, திருமுறைகளின் அருமை
மகிமையாதிய நன்குணர்ந்தேம்; திருவருட்பா என்னுஞ் சொல்
லின் இயல்புங்கண்டேம் என்று குதூகலங்கொண்டார். நாளுக்கு
நாள் அந்நூலைக்கண்ட இராமலிங்கபிள்ளை அபிமானிகள் பலரும்
சமயாசாரிய சுவாமிகளின்மீதும், தேவாராதி திருவருட்பாமீதும்

அன்புடையவராய்க் கருங்குழியாரை வெறுத்து ஸ்ரீமந் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்பாற் சாலவன்புடையராயினர். அங்ஙனமாக இராமலிங்கபிள்ளை கட்சியார் என்செய்வார் பாவம்! இன்னுஞ் சில காலத்துள் நமது சுவாமிகளின் பாடல்கள் மறைந்து அழிந்துபோய் விடும். அப்புத்தகத்திற்கு மறுப்பெழுத எம்மால் முடியாதே. ஐயையோ அது மறுப்பென்று எழுதிவெளியில் அறிஞர் சிரிப்பர், மறுப்பிற்கு மறுப்பும் வரும், என்றுயோசித்தார். இராமலிங்கபிள்ளை என்பார் செத்தாரை எழுப்புவேனென்று சொன்னமை, மஞ்சக்குப்பம்கோர்ட்டிலே பொய்ச்சத்தியம்பண்ணினமை முதலாய இவை யக்காலத்தில் உண்மையாக நிரூபித்தவையாயினும், அவற்றை இக்காலத்தில் மெய்ப்பித்தல் மிக்க கஷ்டமென்றும், வழக்குத்தொடுத்தால் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் அன்றுதாங்கள் சொல்வதுபோல இராமலிங்கபிள்ளை பாடல்கள் அருட்பாவாகும் திருமுறையாகும் என்று எழுதிக்கொடுப்பாரென்றும், அவரை பகைத்துப் பிரித்துப்பண்ணிவிடலாமென்றுமெண்ணி, இராமலிங்கபிள்ளையின் தமையனார் மகனான சென்னை இராயபுரம் வடிவேற்பிள்ளை என்பவரைக்கொண்டு சென்னை டவுன்போலீஸ் கோர்ட்டில் சென்ற ஜூலை 26ல் மருட்பா மறுப்பு என்னும் புத்தகத்திலிருந்து 27 விஷயங்களை எடுத்து, அவை பொய்யென்றும் அவதூறென்றும் ஒரு வழக்குக் கொண்டுவந்தனர். அவ்வழக்கு இலக்கம் 5610.

சென்னை ஹைகோர்ட்டு வாசால நியாயதுரந்தரரும் ஆந்திர திராவிட ஆங்கில சமஸ்கிருத வித்வத்துடையவருமாகிய பிரம ஸ்ரீமத் வி. விசுவநாதசாஸ்திரியார் B. A., B. L. அவர்களும், பிரம ஸ்ரீமத் எம். சாமசாவ் B. A., B. L. அவர்களும் மருட்பாமறுப்பு என்னும் புத்தகத்தைப் பார்த்து அதில் இராமலிங்கபிள்ளை "சதுமறையாகம சாத்திரமெல்லாம் சந்தைப்படிப்பு, என்றும் வேதாகமங்களாற் பிரயோசனமில்லையென்றும் நிந்தித்தார் என்பதையறிந்து இப்படிப்பட்டவரா அருட்பிரகாசவள்ளலார் இவர்பாடல்களா அருட்பா என்றுவிசனித்துத்தாங்கள் இந்த வழக்கிலேற்பட்டு

வதாகவுரைத்து வாதிக்க ஆரம்பித்தனர். குற்றமென்று சொல்லி வந்த இருபத்தேழு விஷயங்களுள் இருபது விஷயங்கள் இராமலிங்கபிள்ளையின் மருட்பாவிலே நேரிற் காட்டினர். வாதி வடிவேலுபிள்ளை எவ்வாறும் அவற்றை நீக்குவிக்கக்கூடாமையால் பிரதிவாதி அவர்களும் தன்னிமித்தம் பிறரும் எழுதியவைகளுமாகிய குற்றப்பத்திரிகை வாசித்தமையால் அவற்றை முடிப்பித்தல் அவசியமாயினது. அவ்விஷயங்களும் (1) போலியருட்பா மறுப்பு, (2) குதர்க்காரணிய நாசமகாபரசு கண்டனம், (3) ஆத்ம சப்பாட்டு, (4) மூர்க்குணவாதத்தின் முறைமறுத்தல், (5) இராமலிங்கபிள்ளை படிற்றொழுக்கம், (6) தத்துவபோதினி, (7) தத்துவ விவேகினி, (8) சிவத்துரோகி, (9) கவித்தொகை, (10) ஞானபானு, (11) கெட்டிவ் பாவிரப்பேசியன், (12) அருட்பாப் பத்திரிகை, (13) வர்த்தமான விசாரிணி, (14) இரவிப் பிரகாசிகை, (15) சித்தியாவாதவிசாரணை, (16) பாவனா சரித்திர தீபகம் முதலாய புத்தகங்கள், பத்திரிகைகள், விளம்பரங்கள் முதலும் இவைகளைக் கொண்டும், சுருதியாகமங்களைக் கொண்டும், உண்மையாக நடந்தனவென்றும், அவற்றிலுள்ளவைகளைப் போக்கடித்து மருட்பா மறுக்கவந்தவர் புதிதாக எழுதினதல்லவென்றும், பெருமையாகிய வெறுப்புவேலென்றது இராமலிங்கபிள்ளையே தமது சைவ முத்திரை பிரசோற்பத்தி (1871) வெளியிட்ட அருட்பாப் பத்திரிகையாற் றெரியவருகின்றதாம் (1871) செப்டம்பர் எழுதப் பட்டுத் தபாலாபீஸ் முத்திரையுள்ள கடிதமொன்றும் உண்மையாகுமென்றும் நிரூபிக்கப்பட்டன. இவற்றுள் சொத்தவை யெழுப்புதல் முதலாய பாட்டுக்களுக்குத் தத்துவார்த்தம் இருக்கின்றதென்பது பொய்யாயிற்றென்று நிறுத்தலைந்தார் மேலாவித்து உறுதிப்படுத்தினர்.

இவைகளேயன்றி இராமலிங்கபிள்ளையின் செய்கைகளெல்லாம் வடலூர்மேட்டிக்குப்பத்திற் போயிருந்து நேரேபார்த்தறிந்தவர்களாயுள்ளவர்கள் பலர்சாட்சிகளாக வந்தமையால் பிள்ளையவர்களால் அழைக்கப்பட்டனர். அவர்களெல்லாம் மிக்க கன்னிய

முடையவர்களாகவும், சிவபக்தி, சிவனடியார்பக்திகளிற் சிறந்த வர்களாகவும் பொலிந்துதோன்றினர். அவர்களோ ஸ்ரீ சிதம்பரம், திருப்பரங்குன்றம், கூடலூர், திருப்பாதிரிப்புலியூர், காஞ்சிபுரம பாலூர், திருத்தணிகை, அயன்புரம், குத்தப்பாக்கம், கேசபர், திருமுருகன்பூண்டி, புதுச்சேரி, கோலியனூர், விழுப்புரம், சிக் கந்திராபாத், சென்னை முதலிய இடங்களிலிருப்பவராயவர். சைவ சித்தாந்தபானுக்கள், மகாவித்வான்கள், ஆசிரியர்கள், குருக்கள் மார், மடாதிபதிகள், பத்திராதிபர், இராசாங்க உத்தியோகத்தர், பிரசங்கதாரர், ஆதீனத்தம்பிரான்மார், தர்மகர்த்தர்கள், எனப்பல திறப்பட்டவராகக் காணப்பட்டார். அச்சாட்சிகளைக்கொண்டும் இராமலிங்கபிள்ளை அருள்பெற்றவராகாரென்றார், அவர் தாமே தற்கொலை செய்துகொண்டாரென்றும், அவர்க்குத் திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் பெயரும், அவர் பாடல்களுக்கு அரு ட்பா, திருமுறை என்னும்பெயர்களும் தகாதென்றும், மற்றைய கடைச்சரக்குகளாயும் புத்தகங்கள், பத்திரிகைகள், விளம்பரங் களிற்காணப்பட்டபடி பொய்யாகவுள்ளனவென்றார், தேவார முதலிய பன்னிருதிருமுறைகளே திருவருட்பா, திருமுறை என் று சொல்வதற்குரியனவென்றும், இராமலிங்கபிள்ளை பாடல்கள் சைவ சித்தாந்தத்திற்குமாறாகி விஷங்கலந்த பால்போல் இருக்கின்றனவென்றும் நிரூபிக்கப்பட்டன. மருட்பா மறு ப்பைத் தாபிக்கவந்த சாட்சிகள் எல்லாம் வியந்து போற்றத் தக்கனவாயினும், அவருள் சைவ சித்தாந்த மகாபீடம் மகா சற் குரு காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சி. செந்திநாதசுவாமிகளின் வாய் மொழிகள்கேட்டு ஆனந்திக்காத சைவசித்தாந்திகளுமுளரேயோ. வாதிபக்கம் சாட்சியாகவந்த மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணாக்கரும், சென்னைப்பிரசிடென்சிகாலேஜ் தமிழ் ப்பண்டிதருமாகிய பிரம ஸ்ரீமத் உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் திருவருட்பா என்பது தேவார திருவாசக முதலியவற்றிற்குச் சொல்லவேண்டுமேயன்றி, இராமலிங்கபிள்ளை பாட்டுகளுக்குத் திருவருட்பா, திருமுறையென்றுசொல்வது தகாதென்றும், அப்

படிச் சொல்லுஞ் சம்பிரதாயவிருத்தமாரும் என்றும் நீதிஸ்தலத்தில் பெருமதிப்பிய நியாயாதிபதி முன்னிலையிற் நிறுவியுள்ளார். அதனால் கேட்டமருட்பாக் கட்சிக்காரர்கள் அவமானமுற்றுத் தலைகுனிந்துகொண்டனர். என்செய்வார். மகாவித்துவான் ஸ்ரீமத் [illegible] பிள்ளையவர்களும் திருவிடைமருதூர் உலா என்னும் தமது பிரபந்தத்தில் (திருவருட்பா [illegible] சேர்க்கைகள் [illegible] திருவருட்பாவென்னைச் செறுமே என்று இராமலிங்கர்பாட்டைக் கண்டித்தனரே.

நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் கட்சியைச் சேர்ந்த வாதி பக்கத்தில் பூர்வ சாட்சியாகவுள்ள மகாவித்துவான் பிரம ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையர் அவர்களும் சாட்சிக்கு வந்தனர். உண்மை வெல்லுமாதலால் உண்மையே என்பது கண்டோம் கண்டோம் என்றோர் உலகர். என்னே வாதிபக்கத்துச் சாட்சியாலேயே ஸ்ரீமத் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மேற்கொண்ட உண்மைநிறுவப்பட்டது மன்றியும் அவ்வாறெல்லாம் ருசுவாக்கப்பட்டமையால் நியாயாதிபதி அவர்கள் 1904ஆம் நவம்பர் 21உ ஆகிய குரோதி வருடம் கார்த்திகைச் சோமவாரப் புண்ணியதினத்தன்று, உலகின்கண் உள்ள உண்மைச் சைவர்களெல்லாம் ஆனந்தசாகரத் தழுந்தா நிற்க, மருட்பாக்காரராகிய கருங்குழியார் அபிமானிகள் அகஸித்துப் பார்முகமாக, சமயாசாரியசுவாமிகளின் திருவருட்பெருமை யிருந்தவாறென்னே, என்னே, என்று வியந்து வியந்து வந்தவர் துதிக்க, தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளை நம்பினோர்க்கு ஒருவரேனும் துன்பமுறுவரோ வென்று அன்பர்களுரைக்க ஸ்ரீமத் நா. கதிரைவேற்பிள்ளையவர்களின் மெய்யன்பு கண்டோம் கண்டோம் என்று அடியவர் கூட்டம் ஆர்க்க, இந்த உண்மைத் தீர்ப்பை யுரைத்த கனம்பொருந்திய நீதிபதி அவர்கள் வாழ்க வாழ்க நீடூழிவாழ்கவென்று ஆன்றோர்கள் ஆசிகூற வழக்கைத் தள்ளிவிட்டனர். தேவாரமுதலிய திருமுறைகளே அருட்பா ஆயின. இராமலிங்கபிள்ளைபாட்டு மருட்பா ஆயிற்று.

ஞாயவாதத்துரந்தரர் என்றபட்டம் சித்தர்கள்த்து இராசாங்கத் தாராலும் உறுதிப்படுத்தப்பட்டது. இம்மங்கல குதூகலசங்கதி அறிந்தவுடனே ஸ்ரீசிதம்பரம், மதுரை, காஞ்சி, திருவண்ணாமலை, திருச்செந்தூர், வேதாரண்யம், இராமேச்சுரம், திருமயிலாப்பூர், திருத்தணிகை முதலிய பிரதானதலங்களிலே கோபுரங்களோடும் தீபங்களிட்டார்கள். கொடிகள் தூக்கினர், அதிர்வேட்டுகள் முழக்கினர். சென்னையிலுள்ள ஆலயங்களோடும் அபிடேகம் அர்ச்சனை, உற்சவம், தேவாரதிருவருட்பாப்பாராயணம், மகேசுவரபூசைகள் செய்ததுபோல ஈழ தலங்களில் அன்றி இலங்கை பினாங்கு, சிங்கப்பூர், சிக்கந்திராபாத் முதலிய இடங்களிலும் இயன்றஇயன்ற சிவதருமங்களும் கொண்டாட்டங்களும் செய்யப்பட்டன. கற்கண்டு, சர்க்கரை, சிற்றுண்டிகள், நாளிகேரங்கள் வஸ்திரங்கள், பழவகைகள் முதலியனவைகளும் ஆங்காங்கு வழங்கப்பட்டன. தேவார திருவாசக முதலியவைகளே திருவருட்பா என்பதும், இராமலிங்கரின்பாடல் மருட்பா என்பதும் இவ்வழக்கால் உறுதியாயின. இராமலிங்கரின் பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பாமறுப்பு என்னும் நூலும் உண்மையுள்ள நூலாயிற்று. இவ்வழக்கிற்கு உதவிசெய்த உண்மைச் சைவர்கள் யாவருக்கும் நன்றிகூறுகின்றோம். ஸ்ரீமத் சதிரைவேற் பிள்ளை அவர்கட்கு உதவிபுரிந்த தேவகோட்டை நகரப்பிரபுக்கள் ஸ்ரீ காஞ்சிச் சித்தாந்த சிவநேசத்திருக்கூட்டத்தார், யாழ்ப்பாணத்து மகாவித்வான் ஸ்ரீமத் சி. சுவாமிநாதபண்டிதர் அவர்கள், சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்தசபையார், இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையார், புரசைப்பாக்க சிவதமிழ் வேதபாராயணசபையார், திருவல்லிக்கேணி ஆளுடைய பக்தஜன சபையார், சென்னைச் சைவசித்தாந்தசபைக்காரர் முதலாயினோர் களின் சிவசேவையும் திருவருட்பாவ ... விசேடித்தக்கவே. இவ்விஷயங்களெல்லாம் உலகத்திற்குத் தெரிவித்த நம்முடைய சிவபுண்ணியமுடையார் யாவரும் பரஞ்சோதி சிவஞானமுத்த பரமாசாரியசுவாமிகளின் திருவருளை வேண்டி நிற்கும் இவ்விதழ மனோரதபூரியங்கு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## மருட்பா மறுப்புவிறுப்பமாக

ஸ்ரீ காஞ்சிபுரத்தில் திருவருட்பா கஜாரோகணபவனி மகோத்சவ
த்தில் ஸ்ரீசற்குரு ஸ்ரீ வைதிகசைவசுத்தாத்துவித சைவசித்தாந்த
பரமாசாரிய சுவாமிகள் கட்டியங்கள்.

## ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கட்டியம்.

1 திருஞானசம்பந்தனே - சிவஞானவமிர்துண்டகோவே
அருமைஞானமனைமயிசகாமே - அம்பிகைக்கன்பானதூமே

2 தோணிபுரமகராசநகரையே - தூயதவக்கலைஞானவரையே
பேணியபெருமையுயர்விக்குமுரையே - பேசரியவாழ்வுக்கோர்கரையே

3 சிவபாதவிருதயர்க்கொர்மதலாய் - திணியானபிறவிக்கொர்முதலாய்
தவபாதமருடந்தருதலாய் - சகமெய்ச்சுசித்தாந்தமுதலாய்

4 தோடுடையசெவியென்றபோதா - தோலாதவின்பமருளுதா
பீடுடையதமிழ்வந்தவேதா - பிரமற்குமெட்டாதபாதா

5 மங்கையர்க்கரசியிருநேயா - மந்திரியுளத்திலமர்தூயா
சங்கரர்க்கின்பருளுமவாயா - சங்கமாமருகுருவருளுபாயா

6 பொற்றாளமொளியின்றதோளா - பூம்பாவையாக்கியதாளா
கற்றோர்கடொழுகின்றதாளா - காரானைவக்காணவாளா

7 பந்தர்குடைசின்னமுறும்ராஜா - பாவையெழவருமட்டகாசா
வந்தவமனறுக்கருவிநாசா - வல்விடந்தீர்த்துய்த்தநேசா

8 ஓடனைப்புனலிட்டவாழ்வே - ஈரிரண்டுரைபாதயாவே
பாடருட்பாவின்றருந்தே - பரவிடற்கமையாதமின்வே

9 உலவாதகிழிதந்ததிருவே - யொன்றானசித்தாந்தவுருவே
கலவாதவுலகிற்கொருகுருவே - கதியானகனிவந்ததருவே

10 சிற்பரக்கனியருண்மகனே - திருவருட்பொழிவிந்தமுகனே
கற்பவர்க்குமுதூயமகனே - கௌணியக்குலதீபகனே

11 முத்தமிழ்ச்செறிவிரகமணியே - முதிர்பிணிகளைபோக்குமணியே
சத்தியத்தவஞானமணியே - தன்னேரிலாதசற்குணியே

12 பாலறுவாய்கொண்டசீலா - பரசமயவரியென்றவேலா
மேலவீடளியணைக்கோலா - வெங்கருக்கருளுமறுகடலா

## ஸ்ரீதிருநாவுக்கரசுநாயனார் கட்டியம்

1 திருமுனைப்பாடிவருவீரா - திருநாவுக்கரசென்றசீரா
வருமுனைப்பகைவென்றசூரா - வாழ்வானமும்முறைசெய்தீரா
2 மதமோடமறைபாடுவயமே - மருவலர்க்கிடியன்னபயமே
சதமானசைவத்தினயமே - தருமசேனர்க்கபயமே
3 நீற்றறையுமின்பானநிதியே - நெடுங்கலைப்புணையாக்குபதியே
மேற்றவர்க்கன்பானதுதியே - விடநீக்கியுயிர்வைத்தகதியே
4 திலகவதியின்வந்ததுணையே - தியபவநீக்கருட்புணையே
கலகமில்லருளுக்கிணையே - கதவைத்திறந்தையிங்கணையே
5 உழவாரப்பணிகொண்டபொருளே - உம்பர்க்குமெட்டாததெருளே
பழகாத பரமதக் கிருளே - பாவியேமுய்யவன்பருளே
6 தாண்டகந் தந்தருளு நிருபா - தகுமறைப்பொருளானசொருபா
ஆண்டெமைக்காக்கின்றகிருபா - அப்பனெனநின்றிலங்கிருபா
7 படிக்காசுவாங்குபூபாலா - பழமறைகளோலமிடுதாலா
செடிக்காமன் வெள்கவரு கோலா - திருவாரூருறவர்கோன்பாலா
8 அப்பூதிதன்பவைகளைந்தோய் - யருட்பாவழங்கவருமைந்தோய்
செப்புமறுபூதியுளமைந்தோய் - திருவிபூதிப்பொலிவதிந்தோய்
9 சங்கரன்பாதமதிநேயா - சாயுச்யமுற்றவொருதூயா
நங்கள்குலதெய்வசகாயா - நவிலருண்மொழிமன்னுவாயா
10 நேரிசைமலர்ந்தசிற்கனமே - நிருபனெனநின்றபொற்றனமே
பாரிசைத்தாண்டவிற்பனமே - பரவுதும்மூன்றுமுறைதினமே

## ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார் கட்டியம்

1 சிவனுருக்கொண்டசுந்தரனே - திருமலர்த்தாயஞ்செய்பரனே
பவவிடமடக்கு செங்கரனே - பரமனுக்கொருதோழவுரனே
2 பரவையடிவளையாதமேரே - பாதியற்றாதிட்டசீரே
யரன்வலிந்தாட்கொண்டநேரே - யருளியாப்புறைபெய்தகாரே
3 சங்கிலித்தொடர்கொள்குஞ்சரமே - தகுபத்தர்புகழ்வைபஞ்சரமே
எங்கிறிப்பாசமறுசரமே - யியலிசைத்தமிழ்செய்தவரமே
4 தடங்கராமுதலையழைத்தவனே - தாளுறுதாண்மலர்சிரத்தவனே
யடங்காதபுகழ்நிறுத்தவனே - யருட்பாவோர்முறைமலர்த்தவனே
5 வன்றெண்டநாமத்தமண்ணால் - மணக்கோலமுற்றசிரேந்தால்
அன்றிண்டைமலர்கொய்தவள்ளால் - ஆரூரிலம்மானுக்காளால்
6 கச்சியிற்கண்பெற்றகண்ணே - சமல்சேருமன்பர்களாகண்ணே
யுச்சிதத்தொண்டர்பெறுமெண்ணே - யோங்குபரவெளியானவிண்ணே
7 வெள்ளானைமேற்சென்றவெளியே - விண்டுவுங்கண்டிடாவொளியே
பள்ளவயனெற்பெற்றவளியே - பரமதப்பஞ்சிக்குவளியே

8 திருக்கோடிக்கவிக்குற்றேம் - பிரமையடியார்க்கடிப்பட்டேம்
பெருவாழ்மலவன்மைசெற்றேம் - பிரணம்பியென்றிடப்பெற்றேம்
9 வெள்ளியம்பலமின்றுவருமுன்னே - விரியுயிர்க்குறவானவன்னே
பள்ளிகொச்சத்திபெருமன்னே - பந்தணைசிகாமணிப்பொன்னே
10 தேவாரவாசியகவேறே - சிவனைவன்சுந்தரக்கூறே
நாவாரவாழ்த்துபவர்பேறே - நலமீயும்வற்றுதவாறே.

## ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் கட்டியம்.

1 வாதவூர்தனில்வந்தபெரியாய் - மாத்தனன்மனையிற்குமரியாய்
காதற்றரிபரிகொண்டவரியாய் - நற்றொண்டராயிரத்தரியாய்
2 பொன்னென்பெண்பெற்றவலையே - பூரியர்க்கெட்டாதவலையே
நன்கொண்டமந்திரித்தலையே - நாயகன்சமுல்வைத்தநிலையே
3 சீராரும்வாசகத்தையா - திருக்கோவைப்படியருளெய்யா
போரார்பெருந்துறைச்செய்யா - பெம்பிரானைவல்செயுமெய்யா
4 புத்தவிருளைக்குமெய்ச்சுடரே - புரியாதமருளறுகடரே
பித்தமுகந்தவர்குருவேறே - இலையாணிக்கரசுடரே
5 பிரமற்குமறியாதமுடியே - பிறைமவளைதிருவருட்குடியே
திருவாக்குமொருத்திருப்படியே - செகமெலாமின்புகழும்படியே
6 அத்துவிதசித்தாந்தகுருவே - பருவுலகனைத்துந்தருவே
பத்துவிதவியன்மிக்கதருவே - பயன்றுமியவைதாவுருவே
7 இல்லையிற்சிவயோகவரையே - செறிபுறந்தலைச்செய்ச்சுமுறையே
தொல்லையிற்சிக்காத்துறையே - தொன்மலககளைக்குக்கரையே
8 தென்னவன்முற்பிரமராயா - சிவைப்பொருண்முறையோதுவாயா
பன்னிடற்கரியதவநேயா - பரமனுக்கினியைசெறிதாயா
9 மூவகைத்திரட்டுநிறையா - முன்விறாப்பெறும்பெருந்துறையா
சாவகையர்க்கவமசெய்யறையா - சந்துமுடம்பெருநெட்டுமூறையா
10 ஆலயநசெய்வித்தநிதியே பருட்பாப்புகன்றவிற்பதியே
மாலையுற்கெடாதகதியே வந்தருணமாணிக்கமதியே

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஞானஸ்கந்தகுருப்யோநம:

## காஞ்சித்திருமுறைமஹோற்சவநாமாவளி.

### ஸ்ரீவிநாயகர்.

பைம்பொகள்நந்தருங்கஜாமணியே - மங்கெறுங்கலீயாள்தாமணியே
பாசாங்குசதாரகரனே - பன்னிருவண்டருள்கரிமுகனே
வல்லபாமணாபிகமகிழ்ந்தா - மணியபயர்ந்தருள்புரியெந்தாய்
சீரார்விகடசக்கரனே - சின்மயபாப்பரனேவாக்கரனே
திருவருட்பாக்கள்சிறந்திடவே - செருமருட்பாக்கள்பறந்திடவே
செய்யகுருமணியேதிருமணியே - சிற்பையக்கருள்பெருமணியே.

## ஸ்ரீசிவபெருமான்.

கச்சியில் வாழு மேகம்பா - இச்சையு மருள்புரி யொருநம்பா
உமையொரு பாகத் துடையவனே - எம்பெருமான் மால்விடை யுடையவனே
கைலா சபதே யேகம்பா - கருணை புரிதரு மேகம்பா
கச்சப நாதன் றிருவடியே - கருதுவ தென்றும் பெருவடியே
மேற்றளி யுறையு மேலவனே - [illegible]
அனேகதங் காவத மார்ந்தவனே - [illegible]
ஓணகாந்தன் றளியிறையே - பாடுக திருவருட் பாவுறையே
காரைத் திருநாத வென்போமே - காரும் பழவினை விண்டோமே
திருவருட் பாவுக் குரியவனே - சீரில பாவுக் கரியவனே

## ஸ்ரீகாமாக்ஷிதேவி.

சாம்பவி திரிபுரை தற்பரையே - சம்புவ னிடத்துறு சிற்பரையே
பாம்பணி பைரவி யோங்காளி - சாம்பவ னிடமுறை சங்காளி
சின்மயி பூரணி காமாட்சி - நீயருள் புரிவது மெய்மாட்சி
சூலிபு ராதனி மாதேவி - கருணை மலிந்தெனைக் காதேவி
புங்கவி சங்கரி பூரணியே - புண்ணியர்க் கருள்புரி காரணியே
அருட்பா விதென வறிந்தவளே - யறியாக் கடனைக் குறைத்தவளே
மங்கல மாதவி சூலினியே - மாதய வைப்பரி பாலினியே.

## ஸ்ரீகுமாரக்கடவுள்.

சூரர்க்கருள் செய்திடு நாயகனே - தூய்மையிலோர்க்கரி தாயவனே
வள்ளிமணந் தருண மாமணியே - வானவர்க் கருள்புரி தூயமணியே
தானவர் வேரறக் களைந்தவனே - வானவர்க் கருள்செய வந்தவனே
குமரகோட்ட மணியே குருமணியே - அமரர்கள் வாட்டந் தவிர்மணியே
பன்னிரு முறைமக டிருமுறையே - பகர்மறு முறைகள் பெருநிறையே
என்பது தெளிவித்த கதிரேசா - எழிலடி யவர்க்கருள் பழநேசா
கதிரைவேற் புலவனைக் காத்தவனே - கரமதில் வேலினைச் சேர்த்தவனே

## ஸ்ரீசைவசமயாசாரியசுவாமிகள்.

பிரம புரத்துச் சம்பந்தா - பேறு மெமக்கரு ளின்பந்தா
முதலாந் திருமுறை செய்முதலே - [illegible]
வரபுர கௌணிய துவபதியே - வகையெமக் கருடந் தளபதியே
நாவுக்கரசெனும் பெருந்தகையே - நண்ணலர்க் கரிதன் னருட்டொகையே
வாகீசப் பெருமான் றனையே - வந்தித் தேத்திடற் போம்வினையே
சுந்தர மூர்த்தி திருவடியே - தொழுதாற் போம்நம் பவமிடியே
ஆரூ ராண்டகை யற்புதனே - யற்புதஞ் செய்திடு நற்பதனே
வாதவூர் வள்ளலை வாழ்த்திடுவோம் - வாழ்த்தி நம்முடி தாழ்த்திடுவோம்
திருப்பெருந் துறையிற் சீரியனே - அருட்பெருந் துறைமே வாரியனே.

## திருவருட்பா.

பன்னிரு திருமுறை யருட்பாவே - யன்னிய மறுமுறை மருட்பாவே
சீரியர் சொல்லுவ தருட்பாவே - சீரிலர் சொல்வது மருட்பாவே
தேவா ரந்தமை காவியமே - சிவனு ரடியிணை பாடுவமே
செந்தமிழ் வேதந் தேவாரம் - என்பது வேத சாரம்
நால்வர்கள் வாயமரு நற்பாவே - நல்லருட் பாவெனத் தேர்ந்திடுவீர்
பன்னிரு திருமுறைப் பாசுரமே - என்னிலத்தோர் கட்குமீசுரமே
அருட்பாவென்பதை யறிந்திடவே - தெரிப்பாஞ்செயக்கொடி சிறந்திடவே
வேழந் தருட்பா வெழுந்தனவே - வெறுமையர் மருட்பாவொழிந்தனவே
திருமுறை யுற்சவந் தரிசித்தோம் - தியவொ ழிந்தருள் பரிசித்தோம்
காஞ்சித் திருமுறை யுற்சவமே - நாஞ்சிவ னருள்பெறு மற்சகமே
பன்னிரு திருமுறை வாழியவே - பகர்ந்தோ ரென்றும் வாழியவே

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# அருட்பாவெற்றிக்கையுறை வாழ்த்து.

ஸ்ரீவிகடசக்கரவிநாயகர், ஸ்ரீகச்சியேகம்பர், ஸ்ரீகாமாட்சியம்மை
குமாரக்கடவுள் என்னுமிவர்துதி, வண்ண விருத்தம்.

ஞானமும்மத போதகன்றிடு நங்கள்கச்சியி லேயமர்
கனிவமென் விழி யருளவர்ச்சனை யன்பியற்றிய மாயனார்
கருசுதர்சன மிடவுருற்றிய மெய்யெலாம்வலை நடேசா

தானவித்தக நாயகன்மலை மங்கையின்றன மாவடு
தருகைமுன்வலை யணைதழும்பிவை யன்றியெவ்வடி வேயிலார்
தழையுமந்திர வடிவரம்மறை தந்தமாந்தரு நிழலாரே

மோனநன்மொழி யானதந்தையி னஞ்செவிக்குவை பூரண
முதியநல்லறி வினையுமெய்க்குரு முந்துகந்தனை யீனெரு
முதல்வியன்பினை விழியினம்மையெ னிந்நால்வரை முனுவாமே

தீனஜின்றிடு ராமலிங்கன செய்யுளங்கவை யேடுறு
திருவைதந்திர மதினியைந்திடு தெவ்வழக்கவை யோடவே
இடமுறத்தொரு பனிருமெய்ம்முறை செப்பநாட்டியவருளாலே

## இந்தியசக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி வாழ்த்து.

உலகமெங்குஞ் செங்கோலைப் புரிசக்ரவர்த்திமுடி யுடையேழெட்வார்ட்
டலகிலா மன்னவர்க்குங் கேசரியிந் தியதேச நலத்தா ரெல்லா
மிலகுதங்கள் மதங்காக்கப் பெருங்கருணை யிருத்தியர சியற்றுங்கோமான்
கலகமின்றி யலெக்சாண்டி ராவினையோ டெப்போதுங் கலந்து வாழி

## சென்னை நியாயதலச்சிரேட்ட நீதிபதிவாழ்த்து.

மகமதிய சாதியினி லுயர்ந்தமர பினிற்பிறந்து வண்மை சீலஞ்
சமதிக்கு மீகைபொறை சத்தியநல் லறிவுடைமை தாமேயன்பு,
வகமதியஞ் செல்வமெலாமடைந்துதன்றன் மொழியினன்றியாங்கிலத்தோ
டிகமதிக்கு மாங்கிலமு நந்தமிழு மினிதுதெரிந் திருக்குமேத்தல்

கூடலூர்ப் பகுதிடிப்டிக் கலெக்டராயிருந்துபுகழ் கொண்டோ னத்தாற்
றேடருமா சாங்கமகிழ்ந் தளித்தபெருங் கலெக்டரெனுஞ் சீர்த்தவேலை
யாடலாம் பார்த்தெவர்க்கு மின்புறுத்து மண்ணலெங்கள் சைவத்தோர்கள்
நீடவேசெய்ததவப் பயனாகச் சென்னையினி னோர்ந்தான் யாதோ

யாவனெனிற் சென்னையினிற் போலிசுநீ திதலத்தி லிருக்குநாய
காவலருண் முதல்வனாஜ ஜசாகன் உசையின் மகம்மட்கான்சாகேப்
பாவலர்கண் மெய்ச்சியிடும் பெயருடையோனுண்மைகண்டே பதித்ததீர்ப்பை
யாவவெவர் புகழ்கில்லா ரிம்மருட்பா மறுப்பினுண்மை யிவனேகண்டான்

சைவம்போ காதிருக்க மனுவென்பா னிவ்வுருவிற் சார்ந்தான் கொல்லோ
தெய்வந்தா னின்றதுவோ திருவருட்பாச் செய்ததுவோ சீர்சால் கந்த
வையன்றான் செய்தனனோ கரிகாலன் வந்தனனோ வமைத்ததீர்ப்பால்
வையமெலாங் கொண்டாடச் செய்தவெங்க ணீதிபதி வாழிவாழி.

---

மருட்பா மறுப்பின்வாய்மைகாட்டி
யருட்பாப் பன்னிருமுறையெனவறைந்த
நியாயதுரந்தரர் நிலைமைவாழ்த்திவை

தேனைக்கா மலர்கொடருச் சித்தேத்தும் புண்ணியத்தைச் செய்தயூத
வானைக்கா வரசளித்த வருட்பிரகா சப்பெருமா னடியேபோற்றி
வானைக்காவைப்பெறலின் வைத்திலிங்க சாத்திரிமவ் வரத்தாற்பெற்றோன்
சேனைக்காவலர்மதிக்குநல்லுணர்வான்பலமொழியுஞ்சிறப்பாக்கற்றோன்

அரசாங்கப் பிரமாண மனைவயெல்லாங் கரைகண்டோ னடுத்த மாந்தர்
சிரசாங்க மெனவழக்கை மேற்கொண்டே தன்னதெனச் செறிந்து நீதிப்
பிரசாங்கம் பொழிந்துவெற்றி யுறச்செய்வோ னிறையறிவு பேறுதர்மங்
கரசாங்க வழிவற்றை யுடையவனெஞ் சிவனடியே காணுமன்பன்

செந்தமிழு மாரியமுங் கிரமமுறக் கற்றிட்டோன் செவிக்கின்பான
சக்கரமுஞ் சங்கீத நிபுணனொரு வரென்பலாத் தலத்தான சேர்த்து
மைந்தபுவித் தேவிகுல நாதனைச் சிகிலுஞ் சொல்லொன் வாய்மை
யிந்துமா நிலமொன்று மெச்சவருங் கொண்டாடியியல்பிற்றுனே

இயற்றகருங் குழியாசன்ற வருட்பாவை மருட்பாவென் றெறிகிற் காட்டிக்
கயவரப்போ தடிமண்டூறை ரிருடுடோரா மெனக்கோட்டிற் றெரித்துநா
நியாக்தபுக முடனேறத்தைக் கொண்டமாருவிக்கிலைமைக் கொருவர் [ட்டி
மைகிலக்கிகாற் செயல்லா மிகற்சன்று பொருளெல்லா மாக்கல்லே
[ன்றிம்

தன்னருக்கே யெனவெடுத்து நாவிறுக்கக் கைசேரச் சார்க்கமுதாக்கிற்
றின்னமூக்கு மிமைபோல மாரிபரிக டுமைறிவை விமுபோர் தாக்க
மன்னமூக்கு மபிறமெயென வடற்கமிக மெனவார்க்கு மகிழ்த்த குற்சி
செயல்விளங்க மெமிக்தலைத்துச் சேயக்காட்டும் வக்கிலக் சிறந்துவாழி

மங்கலூர் நகர்வாசன் வேதகிரி முதவாத மாண்பன் வேணிந்
திங்கலூர் பாம்பாற்கு நேயன்மா தவராஞ்செய் சேத்தோன்பி
மைபசலூர் மலர்க்குமுவி மயிற்றுமகிழ்த்து நேல்பட்ட நயந்தோனெல்வர் [தோ
துங்கபாட் டருட்பாவென் றுறுதிசெயும் பெருமுயற்சித் தனைபோன்மா

னிக்தரம விங்களைவன் விடயமருட் பாமுறக்கை வேணடுங் போது
மாந்தமை யிருந்துமிக்க மிமமருட லடக்கிமனைறி பரிபாலித்த
வேந்தமொரு சாமரன் வக்கிலென் றிருப்பாகி மாங்களெல்லாஞ் [தோ
காத்துங்கா னிரும்பதைக் கவிகறாமனைநு வாழ்த்துதுமாம் களிப்பாய் மா

## மருட்பா மறுப்புசெய் நாவலன் வாழ்த்து

சமையமெல்லாங் கதிற்புகுத்தும் பரைசிலோயும் பொருளிறப்புத் தானேதேரு
மமையமெல்லாம் விண்கழிய மலைகையெனப் பிறப்பழிப்ப மக்தோரகந்த
சமையுடனும் மெற்றனுறு முயிமொழிபு மெனபயந்த சோம்பர்போலா
தமைவுடனஞ் சிந்தாந்தப் பெரும்பயனிக் கதினுறுத்து மான்றன்மாதோ

பொல்லாதபுத்தமே வைட்டினவ மேகான்மம் புசன்றியாமே
மெல்லாமல் பிரமமெனும் பெரும்பாவ மதமிவற்றை யிடித்துச்சைவ
நல்லார்கள் வியக்கவைத்துக் கருங்குழியான் மருட்பாட்டு நசுக்கிச்சீர்த்தி
வல்லான்மெய்க் கவிவல்லான் கதிரைவே லுவலன்பேர்மலிந்துவாழி

## மருட்பாநிர்க்கந்த கிஞ்சுக கண்டனப்பிரசண்டமாருத வாழ்த்து

இருட்பா வளர்த்த விராமலிங் கன்றன்
மருட்பா மறுத்து வழங்குநாற் செய்து
அருட்பாத் தெரித்த பாலசுந் தரத்தோன்
றெருட்பா வளர்த்தெழு சிறந்துவாழியவே

## தில்லை வாழந்தணர் வாழ்த்து

ஆணையிக் குரோதியினி லாதியோக்க மற்றைநா
ளிணையில் திருவருட்பா வெல்பவனி—காண்டிடவே
மேய்முந்திச் செய்து சுந்தரமேலன் பரசங்க
ளூழ்குதில்லை யந்தணர்முன் வாழ்த்து

கருங்குழியிற் பிறந்துபொல்லா மருட்பாவைப் பாடியொரு கலகமூட்டிப்
பெருங்குறும்பிற் பொய்புகன்று சிதம்பரத்திற் கெதிராகப் புதியமன்று
வருங்குழிச்சேர் வடலூரிற் கட்டியிரா மலிங்கத்தோன் மாயிற்பாட
லருங்குழிச்சேர் மருட்பாவென் றறிந்தெவர்க்கும் பெருவாழ்வைத் தந்தார்
[யன்றோ.

ஏவரொணி லைத்தலத்து மேலாருஞ் சிதம்பரத்தி லினிதுவாழ்வார்
பாவினிலெக் கடராசப் பெருந்தகையார் முதலெடுத்த பண்பார் தில்லை
மேவினிய வந்தணர்கள் வழக்குவென்றி சிறித்தமக்கு வியப்பச்செய்த
தாவிலருந் திருவருட்பா மச்சாதனத்தின் பெருமையினைச் சாற்றலாமோ

நங்களருந் தெய்வதமா நால்வர்க்கு மபிடேக நடத்தியாங்கும்
பங்கமில்பண் ணிருமுறையாந் திருவருட்பா மலையடையைப் பரிவிற்பூசித்
தங்கமலத் தார்புனைந்தோ ரகவலச் சவைமுன்றிற் பவனிவரப்பாடந்
துங்கநல்லே விதிப்பாச் செய்தருளி வைவன்முறையிற் குறுங்காலை

அக்காலத் தருபாயன் சேக்கிழார் பெருமாற்கே யமைத்ததுபோ
லிக்காலத் ததனைக்கண் டேமனமகிழ்ந் தன்பருடன் பெயிந்தாரோ
புக்கெயொ ராயிரக்கான் மண்டபத்திற் றிருவருட்பாப் பொலியும்மனை
பொக்கமுள மருட்பாவின் மறுப்புரையைப் பரிவித்தார் பொலிந்துவாழி

ஏழுடையான் பதிக்குவந்த வெற்றியென்றிறை.

கதிரைவே லருமலனைக் கண்டவுடன் முகமலர்ந்திக் காட்சி காட்டிச்
சதுரையருட் பாக்களுக்கு வைத்ததில்லை யந்தணர்சீர் சாற்றப்போமோ

பண்டுரா லருமறைப் பசருட் பாப்பொலி
வுண்டுரா மலிமசன றட்குணப் பாமருள்
கண்டியா வருமுயக் கானொரா விரமலி
மண்டபப் பொதுவினை வைத்துயிர்ச் சேற்றிய
விண்டமுற் றெண்டர்சீர் விஞ்சியிற் றிஞ்சியே

சான்றுரைத்த தந்தோர்வாழ்த்து.

வித்தையாம் பெருங்கடலை வாய்மடுத்துத் தசிமன்ற விரித்துநாளும்
பத்திமுதற் குருவாருஞ் செந்நெறிப் பெரியோன் முதலோரின்
வைத்தசீர்த் தில்லைமேற் சாற்றியெனும் பனுவின் செந்தமிழ்நூல்
பத்தமிர்து பெய்யவுரைத்த பெரியோர் பொன்மலரடிகள் போற்றியபோற்றி.

மகாவித்வான் ஸ்ரீமத் சி. சுவாமிநாதபண்டிதர் அவர்கள் வாழ்த்து

தேவாரமுதலாய திருவருட்பா வல்லவென்றுஞ் சிறப்பில்லாத
தாவாரும் ராமலிங்கனே குரவனவன்பாடல் சாற்றலாகு
காவாரா வென்றுமிங்குச் சிலபோலிச் சைவர்களே நடித்தாரத்தை
யாவரவா சகிக்காது தர்ப்பணநூல் வெளியிட்டா ரன்பாயன்றே

மறுப்பெழுதமுடியாது வழக்குவைக்கிற் றம்மானத்தின்படியே யெம்மோர்
வெறுப்பாக ராமலிங்கன் பாடலருட் பாவெனவே விள்வாரென்றங்
கொறுப்பாக வழக்கிட்டா ரவர்தமது பொய்மையெலா மோடப்பத்தோ
டுறுப்பாகு மிருமுறையுந் திருவருட்பா வெனவொளிர வுய்த்தான்யாவன்

செந்தூர்க் குகக்கடவு ளடிமறவாத் தலையன்பிற் சிறப்போனு
நந்தூருங் காத்தார்க்கு மறிவரிய பரம்பரன்றனலத்தஞானம்
வந்தூருமெய்யுளத்தோன் வடமொழியுந் தென்மொழியும்வரம்பேகண்டோ
னந்தூரின் யாழ்ப்பாணத் தொருசார்வண்ணைப்பதியோ னருளான்மிக்கோன்

நாவலகம் பெருந்தகையார் மண்ணொருவுந் துக்கமெலா நடுங்கியோடப்
பாவலருஞ் சித்தாந்தக் காவலருந் தலைநிமிர்க்கப் பத்தியோங்கப்
பூவலயத் தோர்சிறக்கப் புலமைமிக்குச் சித்தார்தப் பொற்பேராட்ட
வாவலித்த நாவலனுஞ் சாமிநாதப் பெரியோ னருளான்வாழி.

## உபகாரிகளின்வாழ்த்து.

திருவருட்பாச் சிரீலக்குமித்தருமக் கியன்றபொருள் செறித்தோர்யார்க்குந்
திருவருட்பாச் சீர்சொற்றே செறிவித்தோர் முந்தியநூல் சினத்தராமன்
றெருமருட்பா மறுத்தவிளம் பரங்களுடன் பத்திரிகை சிதைவில்லாமல்
வருதிருபங் கோட்டிலளி யிவர்க்கெல்லா மென்செயுமோ மல்லன்ஞாலம்

## காஞ்சிபுரம் ஸ்ரீஏகாம்பரேச்சுரன்கோயிற் றருமகர்த்தரும், ஸ்ரீ சித்தாந்தசிவநேசத்திருக்கூட்டத்தின் சபைத்தலைவருமாகிய ஸ்ரீமான் கா. மு. சுப்பராயமுதலியாரவர்களின் வாழ்த்து.

எச்சிறப்பு முளகச்சிப் பதிவாழு மழவர்குலத் தேறுநங்க
ளுச்சிதவே கம்பன்றன் றிருக்கோயிற் றருமகர்த்த னுவக்குஞ்சீர்த்தி
யிச்சகத்தின் மிக்குள்ளோன் சமிந்தாரென் றிருக்குமெங்க ளேந்தலீகை
வைச்சகரத் தோன்புலவர் வழுத்துபா மாலைபல வயங்கப்பூண்டோன்.

அரசினர் சன்மானத்தோன் சௌரவநீதித்தலத்தி னதிபன் மெய்ம்மைத்
தருமவழிக் குடனுயிரைத் தானளிப்போ னிவ்வழக்குச் சகாயன்யாண்டுங்
கருமமொன்றை யெடுத்தக்கா லதுமுடித்துப் பெரியவெற்றி கண்டோன்
பொருசுப்பராயவேள் முதலிப்போச் சீமானிங் குலந்தேவாழி. [மேன்மை

காஞ்சி, ஸ்ரீகச்சபாலேசுர சுவாமிகோயில் தர்மகர்த்தர்
ஸ்ரீமந் ம, த, சாமிநாத முதலியார் அவர்கள் வாழ்த்து.

நிச்சமா ளொழுகேகத்துங் கச்சியினிற் குமரன்பா னிலைப்போன் கல்வி
குச்சமா நிற்குமொரு செங்குந்தர் குலத்தில்வரு முண்மை சான்றோன்
கச்சபா லேசுரன்கோ விற்றரும கர்த்தனெனக் குறித்தோ னெங்கா
ணச்சியா வருக்கெநாளுமெஞ் சிவஞான யோகியர்க ணலத்த வீட்டோன்

தணிகையான் மியமுறைத்த சதுரனுக்கு முதலிசெய்தார் தந்தோன்ற
லணிகையான் பெருமாற்றொ ணடிமைதிரு வருட்பாலி னன்போன் மிக்க
பணிகையா குடிகொண்டோ னிவ்வழக்கிற் குதவிசெயும் பண்போனு ன
வணிகைமா லெனுஞ்சாமி நாதப்பேர் முதலியுக மமர்ந்தே வாழி

காஞ்சிபுரம் ஸ்ரீ சத்யஞானேஸ்வரர் கோவில் தர்மகர்த்தரும் ஸ்ரீகாஞ்சிச் சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டத்தின் அக்ராஸனாதிபதியுமாகிய ஸ்ரீமந், அப்பாஸாமி செட்டியா ரவர்களாதும், ஸ்ரீகாஞ்சிச் சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டத்தின் காரியதரிசியும், முநிசிபல் கவுன்சிலருமாகிய ஸ்ரீமந், நூ. அ. பாலசுந்தரமுதலியாரவர்களாதும் வாழ்த்து.

பத்திக்கோர்விதைசாந்தன்குணக்குன்றேநற்றிருக்கோயிற்பணியேபூண்டோன்
சத்தியஞா னப்பாசாமிச் செட்டியெனச் சலன்றறுந் தணவா வன்பு
வித்தைபொறை யுடையானன் முனிசிப்பல் கவுன்சிலன்மெய்விருப்பான்மிக்க
வுத்தமன்பா லசுந்தரனுஞ் செய்யுதவிக் கெல்லையின்றே யுவந்து வாழி

திரிசிரபுரம் ஸ்ரீதாயுமானேசுரர் கோயில்தர்மகர்த்தரும் ஸ்ரீகாஞ்சிச்சித்தாந்தசிவநேசத்திருக்கூட்டத்தின் கௌரவஅக்ராஸனாதிபதியுமாகிய ஸ்ரீமந், நா, கங்காதர முதலியாரவர்களாதும், நூல்மனிகை ஐ.ஓதியப்பமுதலியாரவர்களாதும், வாழ்த்து.

செவ்வந்திப் பெருமான் தருமகர்த் தலைமை செறிந்தவன் வாக்கினிற் சிறந்தோன்
றெவ்வந்தித் தடங்கும் பெருமையன் கங்கா தரனெனச் செறிந்தவன் றுனு
மொவ்வந்த சான்றுக் குரியவ னோதி யப்பநன் முதலியும் வந்தே
செய்வந்த நன்றி சொலுந்தரத் தன்றே சீரியர் வாழிய சிறந்தே

மாயாவாததும்சகோளரி, ஸ்ரீமந், நா, கதிரைவேற்பிள்ளை அவர்கள் மாணவரும் ஸ்ரீகாஞ்சிச் சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டச் சபையாருள் ஒருவருமாகிய ஸ்ரீமந் பெ. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் வாழ்த்து.

காவிந்த னலிசெலவைத் தடிமிந்தக் காஞ்சிநகர்க் கருதும் வேளாண்
மாவிந்தக் குலமணிநம் பெருமாண்முன் னவன்மைந்தன் மறுவில் சீர்த்தித்
தேவிந்த னரவிந்தன் செறிநந்தன் றெரிவரிய திருக்கோ விந்தன்
நாவந்த புகழுந்த ணடியுந்தன் மணம்பதித்த நலத்தோன் பாதோ
தேசன்றே வாரமுதற் றிருவருட்பா நேசனந்தஞ் சிறந்தநேயன்
வாசங்கான் மலர்த்திருவின் வாசன்யாற் றலர்காசன் வழுத்துங் கல்விப்
போசன்கோ விந்தரா சப்பெயர்ப்பா வலனிதைந்து பொருந்த [illegible]ன்
மாசமுற்றீச ருதவிக [illegible] லவன்னவனு வாழி மலிந்தவாழி

காஞ்சீபுரம் ஸ்ரீ ஏகாம்பரேசுவரர்கோயிற் றருமகர்த்தரும் ஸ்ரீ சித்தாந்த
சிவநேசத்திருக்கூட்டத்தின் காரியதரிசியு மாகிய
ஸ்ரீமான், பி. கொ. முருகேசமுதலியாரவர்கள் வாழ்த்து.

சைவத்தோர்க் குயிரெனவுஞ் சாத்திரத்திற்குடலெனவுந் தழைப்போனுநம்
மைவைத்தோர் கடிவைசெயுஞ் சிவநேசப் பெருங்கூட்டம் பதிக்கும் நேயன்
பொய்வைத்த மருட்பாவிற் றிடியன்னுன் முருகேசப் புலவோன்கச்சித்
தெய்வம்போற் செயுமுதவி மறக்குமோ வையமவன் சிறந்து வாழி

முத்தி நலங்களுட் சிறந்த கச்சிபம்பதியிலே ஸ்ரீஏகாம்பரேஸ்வரர் கோவிலில்
ஆராயாமே மீதுபன்னிருதிருமுறைகளை யெழுந்தருளப்பண்ணி 22-1-05 ஆகிய
குரோதி வருஷம் தை மீ 10உ ஆதிவாரசுபதினத்தே திருவருட்பாவிஜயமகோற்சவம்
செய்த காஞ்சி ஸ்ரீ சித்தாந்த சிவநேசத்திருக்கூட்டத்தார் வாழ்த்து.

முத்திபெறு நலங்களுக்குட் சிறந்தொளிருங் காஞ்சியினின் மொய்குரோதி
யொத்தமா தையதியிற் பத்திற்சேர் கதிர்வாரத் தீராறென்று
வைத்தமுறைத் திருவருட்பா மகோற்சவத்தைத் தில்லையிற்போல் வயமாமீது
வித்தகமாச் செயுங்காஞ்சிச் சிவநேசத் திருக்கூட்டம் விளங்கிவாழி
இத்தினத்தி னுற்சவம்போற் காஞ்சியினிற் கண்டதில்லை யிசைந்தகூட்ட
மித்தினத்தி னிணைந்தார்போ லெக்காலு மியைந்ததிலை யீராறென
பத்தியருட் பாமகிமைப் பிரசங்க மதைப்போலப் பார்த்தோமில்லை
சத்தியங்கா ணன்பர்களே யிவையருட்பாப் பெருமையெனச் சாற்றலாமே
சோதியார் காஞ்சியினிற் றொல்வருக்கு மபிடேகந் துதிக்கச்செய்தே
யாதியாங் கோயிலிபத் தருட்பாக்க ளேற்றுவித்துப் பவனியார்ந்து
கோதிலா யிரக்காலோர் மண்டபத்தி னருட்பாவின் மகிமைக்கோட்டி
தீதிலா தாக்குவித்துத் திருமுறையி னுற்சவத்தைச் செய்தோர்வாழி

சென்னை சிந்தாத்திரிப்பேட்டை, ஸ்ரீ அங்காளபரமேஸ்வரிகோயில் தர்மகர்த்தரும்
சர்ச் ஆப் ஸ்காட்லாண்டு மிஷின்பாடசாலை உபாத்தியாயரு மாகிய சி,
முனிசாமிஉபாத்தியாயர் அவர்கள்வாழ்த்து.

சென்னையினிற் சைவநலந் திகழ்சிந்தா திரிபேட்டை சிறக்கவாழ்வோ
னன்னையங்கா ளம்மையுறை யொருகோவிற் றருமகர்த்த னடுத்தோர்ப்போற்று
முன்னவனற் சிவபுராணப் படனதர்ம முனிசாமிக் குரிசில் செய்த
வின்னமெனத் தொகுத்துரைக்க முடியுமோ வவன்சீர்த்தி யிலங்கிவாழி

சென்னை சிந்தாதிரிபேட்டை வாசரும் பன்னிருதிருமுறைத் திருவருட்பாப்
பரிபாலனருமொருவருங், பே - யெக்சாமினர் ஆபீஸ் உத்தியோகத்தரு
மாகிய ஸ்ரீமந், ஆயலூர், வேதாசலமுதலியார் அவர்கள் வாழ்த்து.

ஆயலூர் குழுவர்குலத் தருந்தவத்தின் பயனுருவ மடைந்தோனுகப்
பாயலூர் திருமுற்று முடிவரிய மெய்மையினைப் பலிப்போன்சைவத்
தாயலூர் குயிர்வருந்த மருந்தன்னுன் புலமையோ மடக்கி நோன்மைச்
சேயலூர்க் [illegible] த்துந் தினைக்குநேயன்.

பேயெக்சா மினர்க்கந்தோ ரசாங்கப் பெரும்பணியிற் பெட்பாய்ந்தபோ
னையன்மார் கழலடிக்கு மறவாத சிந்தைதனைத்த நலத்தோன்றென்னைக்
காயசிந்தா திரிப்பேட்டை வாழும்வே தாசலத்தே மண்ணல்செய்த
தாயகமா நன்றிக்கோ ரளவின்றே யன்னவன்சீர் சாற்றவெம்மின்.

பன்னிருதிருமுறைத் திருவருட்பாப்பத்தியினரும், அவ்வழக்கிற் சிரத்தையுட
னுழைத்தவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ இராமநாதபுரம் வெள்ளையதேவர் அவர்களும்,
சிந்தாதிரிப்பேட்டைவாசரும்மதாராஸ்பாங்கியுத்தியோகத்தருமாகிய ம-ா-ா-ஸ்ரீ
ஆயலூர் குமாரசாமிமுதலியார் அவர்களும், வாழ்த்து.

கட்கிமையுங் கடலுக்கோர் கரையுமெனக் கலந்தூசவி களிப்பாச்செய்த
வுட்கலிலா வுளத்தோன்வெள் ளையதேவக் குரிசிலையின் னுரின்வாழுந்
திட்பமுள சைவநலம் பரவிக்கு மெய்ந்நலத்தோ னையலூர்ச்சார்
நட்பினனோர் குமாரசா மிப்பெயரின் முதலோனு நாளும்வாழி.

தேவாரமுதலிய திருவருட்பாப்பத்தியினரும் அரசாங்க வுத்தியோகத்தருமாகிய
சிந்தாதிரிப்பேட்டை ம-ா-ா-ஸ்ரீ சிங்காரவேலு முதலியார் அவர்கள்வாழ்த்து.

தங்கார முத்தமிழ்ப் பன்னிரு மாமுறை தமொறுஞ்சீர்த்
துங்கார முன்னருட் பாவழக் கானதைச் சொல்லு வெற்றி
யிங்காரத் தந்தவர் சிங்காரவேன்முத லிப்பெயரோன்
மங்காத மற்றைய செல்வரும் வாழ்க மகிழ்ந்தென்றுமே.

சென்னைச் சபையார்கள் வாழ்த்து.

கலைமறையாகமவுத்த சித்தாந்த சபையாராயப்பேட்டைநாடுந்
தலபால சுப்ரமண்ய பக்தசன சபையாருந் தரிக்குமேன்மை
வலமுத்துக் குமாரசா மிப்பெயரின் சபையாரும் புரசைவாய்ந்த
நிலவுசபை நங்கள்சைவ சித்தாந்த சங்கமதும் நின்றேவாழி.

யாழ்ப்பாணத்து வேளாளகுலதிலகரும் சைவசித்தாந்தஅத்துவிதபரிபாலனுமுப
காரச்செல்வரும் ஆகியதெல்லியம்பதிஸ்ரீமந்,கதிரேசப்பிள்ளைஅவர்கள்வாழ்த்து

வேளாள குலமகிபன் யாழ்ப்பாணத் தெல்லிநகர் வியனுறு மாளி
தாளாள னுபகாரப் பெருங்குரிசி லிசைநலஞ் சாற்றுங்கேள்வி
தேளாளுங் கருணைதனைச் சேர்ந்தவர்க்கு முயிர்கொடுக்கு மாட்சிவீரம்
நாளாளுங் கதிரேசம் பிள்ளையண்ண லூழிதொறு நயக்கவாழி.

ஸ்ரீஏகாம்பரசிவயோகிகள்மாணாக்கரும் காஞ்சிச்சித்தாந்தசிவநேசத்திருக்கூட்ட
த்தின் கௌரவப்பிரசாரகரும் உரையாசிரியருமாகியஸ்ரீமந், கா, ஆலாலசுந்தரம்
பிள்ளை அவர்களதும்பெருநகர்ப் பிரசங்காமிர்தமும் சைவப்பிரசாரணைரும்
ஆகிய, வித்துவான், பெரு-இரத்தின முதலியார் அவர்களதும்வாழ்த்து.

வித்துவா னாலால சுந்தரவேள் செய்நன்றி
நத்துவாஞ் சைவமதை நாட்டுவான் — புத்தமிர்த
மென்னப் பிரசங்க மேற்றிரத்ன மாமுதலி
மன்னன்சீர் வாழியவே மன்.

சென்னைப்பிரதம நியாயஸ்தலவாசால நியாயதுரந்தரராகிய
ஸ்ரீமத், மாசிலாமணிப்பிள்ளை பி - ஏ, பி - எல், அவர்கள்வாழ்த்து.
நிலைமண்டில வாசிரியப்பா.

திரைமணிகொழிக்குபெருவளம்பொலிந்த, வாரிசூழிலங்கையினவிரியாழ்ப்பா
ணேழியர்குலத்துத்தோன்றியோன்மிக்க,நியாயதுரந்தரனெனியோன்சேர்த்தி [ணை
யான்றாண்டேக்குபுவிரியபிறங்கு, மாண்டகை யகப் பிறுக்கோருறைமாதோ
பிறையணிபார்த்தப்பெருந்தகைப்பெயரொடு, ஈனக்காசின்மணியெனக்காதலைப்ப
தோலாநாவின்மேலகமறைந்த,மாசிலாமணியெனுமண்மையோர்புரசை [ற்றிக்
வாரன்சுகக்குருபகாரிமன் புரிந்த, வுநவிகடமக்கின் கனவிலேயன்றேன்
அன்பருள்படைத்தவறத்தின்செல்வியார், பார்வதிபாகனின்பொலிகவிந்திலத்
உ. [தே.

# திருவருட்பாமஹோற்சவ மகாவிபவம்.

## ஸ்ரீ விகடசக்கர விநாயகர் துதி.

கருவருட்பா விளக்கமறைகள் கண்டொருப்பா டிறக்குமெங்கள் கதித்தநால்வர்
திருவருட்பாமகோற்சவத்தைச்செய்யொருப்பாடிறக்கவிங்குச்செளிக்குமாலோ
வெருவருட்பா விளக்கியக்தவிருட்பாக்கன் மருட்பாவின் விழுந்துமாளச்
செருவருட்கா விளங்கியுயர் திருட்பா வுளத்திருட்பாச் செறிக்குமாவே.

## ஸ்ரீ ஏகாம்பரநாதர் துதி.

கப்பனைநன் மலக்காத்துக் கப்பனைப்போழ் கப்பனைமேட் கப்பிறனைக்
கப்பனைவன் கந்தரப்பூங் கொம்பனையோர் பங்கனைமாக் கப்பிறனைக்
கப்பனையொன் கன்னற்பூ கப்பனைசூழ் கப்பனையிற் கச்சியானே
கப்பனையோர் கப்பனையாக் கப்பனையாக் கம்பெருக்கக் கண்டொழ்வார்.

வைதிகசைவ சுத்தாத்துவிதசைவசித்தாந்த பரமசந்தானாசாரிய சுவாமிகளுள் முன்னிற்பெடிக்கும் முத்தியளித்தஸ்ரீஉமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருமுறைகள் பன்னிரண்டின் மீதும்வைத்த பேரன்புகாரணமாக, திருமுறைகண்டபுராணம், சேக்கிழார் நாயனார் புராணம், என்னுமிவ்விருநூல்கள் செய்து எம்மையெல்லாந் தெளிவித்தருளினார். அவற்றுள் சேக்கிழார் புராணத்திலே ஸ்ரீசேக்கிழார் பெருமானையும் அவரருளிய பன்னிரண்டாந்திருமுறையாகிய பெரியபுராணத்திருவருட்பாவையும் சிதம்பரத்திலே இற்றைக்குச்சுமார் ஆயிரத்துமுன்னூறு வருடங்கட்கு முன்னே யானைமீது எழுந்தருளச்செய்து அநபாய சோழமகாராசா அவர்கள் தாமே சாமரம் வீசி மகோற்சவங்

கொண்டாடினார் என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார். அவ்வாறாய திருமுறைமஹோற்சவ மகாவிபவம் இன்றுங் நடக்கக்காண்பமோவென்று சிவநேயச்செய்வர்கள் இருந்தகாலை, கருங்குழி இராமலிங்கபிள்ளையின் பாடல்களை மறுத்து, தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகளே திருவருட்பா என நிறுவிய "இராமலிங்கபிள்ளை பாடலாபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு" என்னும் புத்தகவிடயமாகச் சென்னைநகராதிகாரநியாயதலத்திற்கொண்டுவந்தவழக்குப்பன்னிருதிருமுறைத் திருவருட்பாக் காரராகிய நங்கட்கு ஒருபெருஞ் சயமாகவும் இராமலிங்கர் கட்சியார்க்கு அபஜெயமாகவும் முடிந்தமையால் அந்தத்திருவருட்பாப் பெருவென்றிகுறித்து மேல்வருந்தலங்களிற்றிருவருட்பா மஹோற்சவங்கள் கொண்டாடப்பட்டன.

முதலாவது திருவருட்பா மஹோற்சவம்.

சென்னை குசிலிக்கடுத்த ஸ்ரீமுத்துக்குமாரசுவாமியார் திருக்கோயிலிலே சென்ற (27—11—04) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீகந்தக்கடவுளுக்கும், ஸ்ரீபரமாசாரியசுவாமிகள் நால்வர்க்கும் மகாபிஷேக அலங்கார ஆராதனஞ்செய்து தேவார முதலிய பன்னிரு திருமுறைகளையும் அலங்கரித்துப்பூசைபுரிந்து, சகலவைபவ உபசாரங்களுடன் இரத்தினவிமானத்தில் எழுந்தருளுவித்துச் சைவத்திருக்கூட்டங்களும் சபையார்களும் புடைசூழ, தேவாராதி பாராயணகோஷத்துடன் மாடவீதிப் பவனிவந்து, அவற்றின் பெருமைகளும் உபந்யாசிக்கப்பட்டன. இவற்றைச்செய்தோர் சென்னை ஸ்ரீயதானந்த முத்துக்குமாரசுவாமி பக்தஜன சபையாரும், சைவசித்தாந்த சங்கத்தாரும், சைவசமய பக்தஜனசபையாருமாவர்.

இரண்டாவது மஹோற்சவம்.

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீசுந்தரேசப்பெருமான் ஆலயத்திலே ( 4—12—04 ) ஞாயிற்றுக்கிழமை மேற்குறித்தவாறு சகல விபவங்களும் செய்யப்பட்டன. இது செய்தோர் இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்ரமண்ய பக்தஜனசபையாராவர்.

மூன்றாவது மகோற்சவம்.

சென்னைப் புரசைக் கங்காதரேசுரப்பெருமான் ஆலயத்திலே (18—12—04) ஆதிவாரம் ஸ்ரீகங்காதரேசுரருக்கும், பங்கசாட்சியம்மையார்க்கும், ஸ்ரீ சமயாசாரியசுவாமிகளுக்கும், மகாபிஷேக முதலியன நடத்தி பன்னிரு திருமுறைகளையும் புஷ்பப்பல்லக்கில் எழுந்தருளுவித்து மேற்கூறியவாறு நடத்தப்பட்டன. இது செய்தோர் புரசைப்பரசிவ தமிழ்வேதபாராயண சபையாராவர்.

நான்காவது யானைவாகன மகோற்சவம்.

ஸ்ரீ சிதம்பரமகாக்ஷேத்திரத்திலே நாளது குரோதி ஹூ மார்கழிமீ 10உ ( 14—12—04 ) சனிக்கிழமை யாகிய ஆருத்திராதரிசனத்திற்கு அடுத்தநாளிலே, வேத சிவாகம புராண தர்க்க வியாகரண மகாவித்வான்களாகிய தில்லைவாழந்தணர் பெருமான்களான ப்ரம்ம ஸ்ரீமத் சி- ஐ- தங்கசாமி தீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத் சி- நா- நடேசதீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத் சி- தண்டபாணிதீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத் சி- கோபாலசாமிதீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத், சிவ- தங்கசாமிதீக்ஷிதர் அவர்கள், ப்ரம்ம ஸ்ரீமத் சி- ற- பொ- குப்புசாமி தீக்ஷிதர் அவர்கள் : முதலான தீக்ஷிதப்பெருமான்களால் விளம்பரமிடப்பட்டு அன்றுகாலை ஸ்ரீ சமயாசாரிய சுவாமிகளுக்கு மகாபிஷேக அலங்கார ஆராதனங்கள் செய்யப்பட்டு, அவர்களால் தேவாராதி திருமுறைகள் பன்னிரண்டினையும் அலங்கரித்துப் பூசித்து: கோயில் அரசுவாவாகிய யானைபணிந்து சுவல் கொடுக்க, அதன்மீது எழுந்தருளப்பண்ணி, கொடி, குடை, சாமரம், முதலிய சர்வோபசாரங்களுடன் புறப்பட்டு, இருமொழித்திருவருட்பாக்கோஷந் திசைகடோறும் செவிபட மாடவீதித் திருவுலாவந்து, இராச சபையாகிய ஆயிரக்கான்மண்டபத்திலே திருமுறைகளை வீற்றிருக்கச்செய்தனர். அதன்பின் ஸ்ரீமத் நா- கதிரைவேற்பிள்ளை அவர்களைக்கொண்டு பன்னிரு திருமுறைத் திருவருட்பாமகிமை, கருங்குழி இராமலிங்கபிள்ளை செய்த சிதம்பரதூஷணம், சிவகங்கையில் விழுந்தகாலை உடம்

புந்துகிறு நினையாமல் நடராசப்பெருமானெடுத்துப் பொற்பூணணிந்தார் என்று இராமலிங்கபிள்ளையுரைத்தபொய், அவர்பாடல் திருவருட்பா, திருமுறை ஆகாதென்பது என்னுமிவ்விஷயங்கள் சுமார் ( 8000 ) எண்ணாயிரம் சிவநேயர்செல்வர்கள் மத்தியில் பலப்பல பிரமாணநியாயங்களுடன் கேட்டோர் யாவரும் ஆனந்தவாரிதியின் முழுகுமாறு பிரசங்கஞ் செய்விக்கப்பட்டது. உடனே தீக்ஷித சுவாமிகள் யாவரும் ஏனைய சிவநேயச் செல்வர்களும் உபந்நியாசகர் கூறியவெல்லாம் சத்தியம், சத்தியம், முக்காலுஞ்சத்தியமே என்று ஆனந்த முற்று பூமாலையிட்டுப் பட்டுப்பரிவட்டந்தரித்துச் சன்மானமளித்து ஆசிகூறினர். அதன்பின் ஸ்ரீநடராசப்பெருமானுக்கு அன்னப்பாவாடையாராதனம் நடத்தப்பட்டது. இதுசெய்தோர் ப்ரம்ம ஸ்ரீமத் தில்லைவாழந்தணர் பெருமான்களும், மகாவித்வான், ஸ்ரீமத் சி- சுவாமிநாதபண்டிதர் அவர்களும், சிதம்பரம் அறுபத்துமூவர் குருபூசைமடம் ஸ்ரீமத், செல்லப்பதேசிகர்அவர்களும், சண்முகசுந்தரவிலாஸ அச்சியந்திரசாலைத்தலைவர் விருத்தாசலம் ஸ்ரீமந் வி- சதாசிவம் பிள்ளை அவர்களும், சிதம்பரம் தேவாரபாடசாலை உபாத்தியாயர், ஸ்ரீமந் நடராசஓதுவாமூர்த்திகள் அவர்களுமாவர்.

## ஐந்தாவது மகோற்சவம்.

தேவ கோட்டையிலே ஸ்ரீமீனாக்ஷி சுந்தரப்பெருமான் ஆலயத்திலே ( 30—12—04 ) வெள்ளிக்கிழமை அபிஷேக ஆராதனங்களும் பன்னிருதிருமுறை மகோற்சவமும் கொண்டாடப்பட்டன. இரவு ஸ்ரீமந் நா- கதிரைவேற்பிள்ளை அவர்களால் திருவருட்பாமகிமையும், கருங்குழியார்பாடல்களின் மறுப்பும் உபந்நியாசிக்கப்பட்டன. உபந்நியாஸ முடிவில் மாயாவாததும்சகோளரியாம் அவர்க்கு மாலையிட்டு பட்டுப்பரிவட்டமுதலிய சன்மானங்கள் செய்தார்கள். அவ்வுபந்நியாச மகோற்சவங்கைய நுபவித்து மகாவித்துவான் ஸ்ரீமத் சி- சுவாமிநாத அவர்கள் வியந்து பேசியபின், தஞ்சை வித்வான்- பிள்ளை அவர்கள், உடுமலைப்பேட்டைக் கல்விச்ச ...ரி... ர ...ரபகவி- முத்துசாமி செட்டியார்

மதுரை வித்வான்- பாஷ்யம் இராமநுஜதாசர் அவர்கள், வல்லைநகர்- கணபதிப்புலவர் அவர்கள், முதலாயினோர் பாமாலை சூட்டியதன்றி, இராமலிங்கபிள்ளை பாடலைக்கண்டித்தும் பேசினர், இது செய்தோர் தேவகோட்டை மேனுவலை ஸ்ரீமந், அரு, அரு- ராம, சோமசுந்தரச்செட்டியாரவர்கள்.

## ஆறுவது சுசாரூடமகோற்சவம்.

ஸ்ரீகாஞ்சிபுரத்திலே ஸ்ரீஏகாம்பரேசுரபெருமானார் ஆலயத்திலே நாளது ஜனவரிமீ 22௳ ஆகிய குரோதிஷு தைமீ 10௳ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீசமயாசாரியருக்கும், சேக்கிழார் பெருமானுக்கும் மகாபிஷேக அலங்கார ஆராதனங்கள் செய்து தேவாரமுதலிய பன்னிருதிருமுறைத் திருவருட்பாக்களையும், கொயில் இராசகசமீது மகாலங்கார சர்வோபசாரங்களுடன் எழுந்தருளுவித்து, அந்தணர்கள், ஓதுவார்மூர்த்திகள்; திருக்கூட்டத்தார் பலப்பல சபையோர்கள் புடைசூழ வேதகோஷங்கள் விம்ம, வாத்தியங்கள், அதிர்வேட்டுகள், பாணங்களின் ஒலிகளாற்றிசைகள் செவிடுபட, இராசவீதித் திருவுலாவந்து ஆயிரக்கால் மண்டபத்திலே வீற்றிருக்கச்செய்து ஸ்ரீமத் கதிரைவேற்பிள்ளை அவர்களால் திருவருட்பாபிரபாவஉபந்நியாசம் நடத்தப்பட்டது. உபந்நியாசமுடிவிலே இராமலிங்கபிள்ளை பாடலாபாசதர்ப்பணவிசயமகாசரபம், ஸ்ரீபரமாசாரிய சுவாமிகள் கட்டியங்கள், காஞ்சித்திருமுறைமகோற்சவநாமாவளி, அருட்பா வெற்றிக்கையுறைவாழ்த்து, திருவருட்பா மகோற்சவவிபவம் என்னும் இப்புத்தகங்களை சிவனடியார்களுக்கு வினியோகிக்கப்பட்டன. உபந்நியாசமுடிவில் இவ்வழக்கு வெற்றிச்சின்னமாக மாயாவாததும்சகோளரி ஸ்ரீமந், நா, கதிரைவேற்பிள்ளை அவர்களுக்கு ஸ்ரீகாஞ்சிச்சித்தாந்தசிவநேசத்திருக்கூட்டத்தினரால் திருமுறைகயிறாற்செய்து அரதனம்பதித்த கௌரிசங்கர உருத்ராக்ஷ- கதிரைவேற்பிள்ளைமானஞ்செய்யப்பட்டது.

முறைத் திருவரு
ளெய்த சிதம்பரது

11137 (67-4) முற்றிற்று.